முருகப்பெருமான் துணை

**மகான் குலச்சிறை நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.07.2022, வெள்ளிக்கிழமை

1. மக்களை ஞான வழிநடத்த
மாதவசியாக வந்த அரங்கனே
தக்கதொரு உன்பெருமை கூறி
தரணியில் சுபகிருது மிதுன திங்கள்
2. திங்களிலே முப்பானோர் திகதி புகர் வாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 31 நாள், 15.07.2022 வெள்ளிக்கிழமை)
தேசிகனுக்கு அருளாசி தன்னை
இங்கனமே குலச்சிறை நாயனாரும்
இயம்பிடுவேன் உலகோர் நலம்பெற
3. நலம்தரும் சன்மார்க்கம் தனை
ஞானமாக அருளும் அரங்கன்
பலம் அறிந்து மக்கள் வர
பணிந்து நல்வழிபாடு செய்ய
4. செய்யவே தீவினை அகலும்
செய்தகருமம் செய்வினை அகலும்
அய்யமுள ஆபத்து விலகும்
அனுகா பெரும் பாதுகாப்பு கூடி
5. கூடியே அரங்கன் காட்டும்
குறைவிலா ஞான நிழலில்
நாடியே பிறவிப் பயனும்
ஞான வாழ்வுமாக மாறும்
6. மாறுதல் தரும் மகா சக்தி
மக்களை தேற்றும் ஒரே சக்தி
ஆறுமுகனார் அவதார வடிவான
அரங்கமகா ஞான தேசிகனே
7. தேசிகனின் கரங்கள் பட தீட்சை
தேடிப் பெற்ற மக்களுக்கு
ஆசியுடன் அனைத்து சூட்சுமமும்
அழியாமை எனும் சக்தி உறுதி ஆகும்
8. ஆகவே தரும வழிகளும்
அரங்கனால் ஏற்கப்பட்டுமே
வகைபட உலகமெங்கிலும்
வளரும் சேவை மூலமாக
9. ஆகவே உலகமெங்கும் மாற்றம்
ஆறுமுகனார் ஞானமாகப் பரவி
மிகைபட உலக மக்களெல்லாம்
முருகப்பெருமான் வழிபாட்டை செய்து

10. செய்துமே ஆத்ம சுத்தியும்
சிறப்பறிவும் கூடி இனிதே
அய்யமற எல்லா சித்திகளும்
அரங்கனால் கண்டுத் தேறி

11. தேறியே ஞானவான்கள் பரவி
தேசமெங்கிலும் ஞான ஆட்சி
ஆறுமுகன் அருளால் நடக்கும்
அறிவித்த அருளாசி முற்றே

–சுபம்–